அகத்தூர் அம்மன்

ஜமீன் ஊத்துக்குளி ✱ பொள்ளாச்சி வட்டம்

திரு. அகத்தூர். **அருள்குமார் காளிங்கராயர்**

திருமதி. **சீதா காளிங்கராயர்**

நாள் : 11.08.2006

மகன் :

அகத்தூர். சித்தார்த் முத்து ராமசாமி காளிங்கராயர்

மகள் :

சம்யுக்தா சத்குரு

சாத்தந்தையர்

காங்கேயச் செல்வியின் ஆலயத்தும், சிவாலயத்தும், இந்த நாட்டிலும் இவர்கள் ஏழாவது காணியாளராகப் போற்றப்படுகின்றனர். சாந்தந்தையர் என்பவர், கொங்குவேளிர் கூட்டத்தைச் சார்ந்தவர். இவரே கொங்குச் சோழர் என்று கூறும் சிறப்புக்கும் உரியவர். இவர் குலோத்துங்கச் சோழன் காலத்து அவன் பகுதி அரசராகப் பல இடங்களிலும், அரசு புரிந்து வந்தவர். இவரை கொய்சனர், அல்லது கோசலர் என்றும் அழைப்பார்கள். இக்கூட்டத்தவர், இருங்கோவேள் என்னும் மன்னவன் பரம்பரையினர் ஆவர். இவரே ஒரு காலத்தில் கி.பி. 500 ஆண்டுகளுக்கு முன், கொங்குவேளிருள் தலைமை வகித்து வந்தவர் ஆவர். இவருக்குக் கொங்கு நாட்டில் பல ஊர்களில் காணியுண்டு. அவற்றின் விரிவைக் கொங்கு வேளிர் என்ற நூலில் காண்க.

சாத்தந்தையர் இருங்கோவேள் அல்லது புலிகடிமால் என்ற வேளிர் பெருமகளின் சந்ததியார், என்பதனை இவரின் புலியைக் குத்திய அடையாளச் சின்னத்தைக் கொண்டும் அறியலாம். இவர்களின் முன்னோரில் ஒருவன் உடுப்பதி (சசகபுரி) என்னும் நகரில் வாழ்ந்துவந்த சமயம் அரய மலையாம், தனது மலையின் பக்கத்து வேட்டையாடச் சென்றனன். ஆங்கு புலி ஒன்று, முனிவர் மீது பாய ஆரம்பித்தது. அவ்வமயம் இவனது வருகையைக் கண்ட முனிவர், இவனைப் பார்த்துக் கொய்சள என்றார். இவன் புலியை வேலால் குத்திக் கொன்றனன். அது முதல் இவனுக்குப் புலிகடிமால் என்ற பெயர் எய்திற்று என்பர். இச்சாத்தந்தையர் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் புலியை வீரன் ஒருவன் குத்தியபாவனையில் செய்யப்பட்ட கல் ஒன்று, சிவாலயத்தும், இவர் வழிபாட்டுக்குரிய இடங்களிலும் இருக்கும்.

அல்லையூர் என்ற இடத்தில் உள்ள சிவாலயத்தும், ஊற்றுக் குழியின் கண் உள்ள சிவாலயத்தும் இப்புலிகடிமால் சிலையை யானே நேரில் கண்டேன். இவ்விரண்டிடத்தும். சாத்தந்தையரே தலைமக்களாக விளங்குகின்றனர். குடவாயில் நகரில் கோட்டை மேட்டின் கீழ்பால் இப்புலிகடிமால் சிலை இன்றுங் காண்போர்கள் கண்ணையும், மனதையும் கவரும் நிலையில் இருக்கின்றது. இந்த இடமும் பண்டு இவரது காணியாக இருந்ததற்கு ஆதாரம் பெரிதும் உண்டு. சாத்தந்தையர் பரம்பரையாரில் "உலகுடையார்" என்ற பட்டத்துடன் வெண் கோழியூர் என்று பண்டை நாளில் அழைக்கப்பட்ட வெள்ளோடைப் பதியில் இன்றும் காணியாளர் பலர் வாழ்ந்து வருகின்றனர். இப்பதியை வெள்ளுறந்தை யென்று புலவர் பலர் பாடிய பாடல்கள் இன்னும விளங்குகின்றன. இவருள் தலைமை பெற்ற பெருங்குடியில் வந்த வேளிர் பெருமகன் ஒருவனே, பண்டு குலோத்துங்கச் சோழன் ஆணை தாங்கிக் கலிங்கத்தை வென்றவன் ஆவான். இவன் காலமுதல் இவன் பரம்பரையாருக்குக் கலிங்க ராயர் என்ற பெரும் பெயர் இருந்து வருகிறது. வெள்ளோடையில் வாழ்ந்த கலிங்க ராயர்களில் ஒருவன், காவிரியோடு, பவானி நதி கூடும் துறையில் அணையொன்று கட்டி, கால்வாய் ஒன்றை ஆக்கி நாட்டுக்கு நன்மை வரச் செய்தான். இக்கால்வாய்க்கு கலிங்கராய கால்வாய் என்ற பெயரும் இன்றும் வழங்குகின்றது. கலிங்கராயன் கால்வாய் என்பது, காலப் போக்கில் காலிங்க ராயன் கால்வாய் என்று வழங்கி வருகின்றது. இக்கால்வாய் ஆரம்பமாம் அணைக்கட்டில் இப்புலிகடிமால் அடையாளம் பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம். இவற்றின் விரிவை அகத்தூர்ச் செல்லி என்ற தலைப்பிலும், கொங்கு வேளிர் என்ற நூலிலும் காண்க. ஆகவே இச்சாத்தந்தையர், புலிகடிமால் பரம்பரையினர் என்பதும் செல்வியைப் போற்றும் இறுதிப் பொறுப்பு இவர் காலத்தில் இவருக்கே சிறந்த நிலையில் அமைந்த தென்பதும் விளக்கமாம்.

ஆகவே இதுகாரும் கூறிவந்த திறத்தால், காங்கேயச் செல்வி அருளார்ந்த நிலையில், இவ்வெழுபெரு வேளிர் பரம்பரையாரால் இன்றும் போற்றப்படும் நிலை பெரிதும் கண்டு மகிழ்தற்குரியதாகும் மாந்தரன் சேரன் எழினி, தூறர், இருங்கோவேண்மான் முதலிய வேளிர்களை தனக்கு உறவாக ஆக்கி, தனது பூமியில், காணி பூமி முதலியன தந்து போற்றினன். அவர்களுக்கு மந்திரி பதவி, சேனைநாதத் தலைமை முதலிய பதவிகளையும் நல்கினான். இவர்களும், சேர மன்னனுக்கு உற்றவிடத்து உதவும் உயிர் நண்பர் ஆனார்கள். இச்செயலை அறிந்த, கொங்கர்கள் என்னும் பாண்டிய புத்திரர், தங்களுக்கு எதிராய் தங்கள் பூமியைப்பறிக்கும் நிலையில், இவர்கள் எதிர்த்தல்கூடும் என்று எண்ணி தங்கள் கூட்டத்தாரோடு கூடி, ஆலோசித்துக் கொத்துமுடிப் பாண்டியன் என்னும் மதுமண்டிலப் பார்த்திவனுக்கு இயம்பினன். அம்மன்னன் மதுரை மாநகரப் பாண்டி மன்னனுக்கு அறிவிக்க, அனைவரும் கூடி அமர்குறித்து, சேரலனிடம் தூதனுப்பினர். சேரலன், தனது நட்பரசரோடு தலையாலுங் கானம் என்னும் பட்டாலியிடத்தில் எதிர்த்தனன்.

சேரலன் படையும், பாண்டியர் படையும் கை கலந்தன. ஏறைமலைக் கருகாமையில் உள்ள தலையாலுங் கானம் செங்களம் ஆயிற்று பாண்டியர் படை தோற்றது. வேளிர்கள் படைவென்றது. சேரமன்னன் களந்தனதாக வெற்றி முரசுடன் பாண்டிய புத்திரர் வாழும் பல இடங்களையும் கைப்பற்றினான்: தனது நட்பரசனுக்கு அதனை பகிர்ந்து தந்தான். அந்த நாள் முதல், கொங்கில், கொங்கர் எனும் பாண்டிய புத்திரர் ஆட்சி குலைந்து, கொங்கு வேளிர் ஆட்சி நிலவுவதாயிற்று.

மாந்தரஞ் சேரலமன்னனும், தனது வெற்றிக்கு அறிகுறியாகக் கொங்கர்களுக்கு உரிய நடுநிலத்தில் மாந்தைபுரி என்ற நகரம் ஒன்றை அமைத்தான். அந்த நகரத்தில், ஐயனார் என்ற கடவுளரை நாட்டுராயன் என்ற பெயரால் நிறுமித்தான்.

மாந்தைப் பூதம் என்ற பூதம் ஒன்றையும் நிறுமித்து, வேணாடு என்ற பெயரில் நான்குவள நாடுகளை ஒருங்கு சேர்த்துத் தனது உறவுக்குரிய வேளிர்களோடு வாழ்ந்தான். இத்தகைய வாழ்வுக்குக் காரணமாய் உடனிருந்து, மந்திரக் கிழமை பூண்டு வந்தவன், இச்சாத்தந்தை கூட்டத்தில் வாந்த வேளிர் பெருமகனே யாவான்.

அகத்தூர்ச் செல்வி

அகத்தூரம்மன் என்ற பெயரால், பொள்ளாச்சிக்கு மேற்கில் ஐந்துகல் தொலைவில் ஒரு செல்வியின் ஆலயம் சிறப்புடன் விளங்குகின்றது. இத்தெய்வம், ஈங்குள்ள நாட்டவர் பலராலும் உயிரினும் பெரிதாகப் போற்றப்படும் பெருமை, ஊற்றுக்குளிச் சமீன்தார், முத்து ராமசாமிக் காளிங்கராயர் அவர்களுக்கே உரியதாகின்றது. இவ்வாலயத்தில், நித்தப்பூசையும், விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டுகள் தோறும், நவராத்திரி விழா, ஜமீன்தார் அவர்கள் மேற்பார்வையில், நடைபெறுகின்றது. நவராத்திரி ஒன்பது நாளும், ஜமீன்தார் அவர்கள், தங்கள், குடும்பத்தோடும், பரிவாரங்களோடும் ஆலயத்தேயிருந்து பூசை முறைகள் அம்மன் உளங்கொள்ளும் முறையில் நடத்தும் திறம், போற்றுதற்குரியது. ஒவ்வொருநாளும், ஆங்குத்தரிசனம் செய்யவரும் அன்பர்கள், உள்ளமும், வயிறுங்குளிர, உணவிடும் பெருமை வியத்தற்குரியது. ஒன்பதாம் நாள், அந்தப்பகுதியில் உள்ள மக்கள் பலருங்குழுமியிருப்ப, ஜமீன்தார் அவர்கள் பரிவாரங்கள், ஆயுதங்களுடன், அம்மனை வணங்கும் வணக்கம் அழகியதாகும். இற்றை நாள் தசமியன்று, அம்மன் கொலுவிற்குப்பின், ஜமீன்தார் , கொலுவமரும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியாகும். ஜமீன்தார் அவர்கள், இம்முறையில் இவ்வம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு போற்றுவதற்குரிய காரணத்தை ஆராய்வது அவசியமாகும். மற்றைய ஆலயங்களில்

பலகாணியாளர்கள் இருப்பது போலன்றி, இவ்வம்மன் ஆலயமும், ஈங்குள்ள சிவாலயமும், முத்து ராமசாமிக்காளிங்கராயர் அவர்களாலும் அவர்கள் பரம்பரையாராலுமே போற்றுதற்குத்தக்க காரணம் வேண்டும்.

உலகுடைய மன்றாடி

அரயம் என்ற நாட்டில் வேளிருள் வேள் என்று உயர்த்துக் கூறும் நிலையில் இருங்கோ வேண்மான் என்ற குறுநில மன்னன் ஒருவன் அர செய்திவந்தான். இவன், மாந்தரன் சேரல் என்னும் மன்னன் காலத்தில், அவனது நட்பரசனாக இருந்தவன், அவனுக்குப்பின், கொங்கு நாட்டில், இருங்கோவேள் என்னும் மன்னனே தலைவனாக, மற்றைய வேளிர்கள் அவனடி வணங்க வாழ்ந்த நிலைகாணுதற்குரியது. கரிகால் பெருவளவன் என்னும் சோழமன்னன் இருங்கோ வேள்மருங்குசாய வென்றான் என்று, பட்டினப் பாலையில் குறிக்கப் பெறுகின்றது. ஆக இவ்விருங்கோவேளும், அவனைச் சார்ந்த கொங்கு வேளிரும், கரிகாற் பெருவளவன் காலத்திற்கு முன்னரேயே கொங்கில் சிறந்த அரசர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

இருங்கோவேள் என்னும் மன்னனும், அவனைச்சார்ந்த ஏழு வேளிரும் வாழ்ந்த நாடே பண்டு வேணாடு என்னும் கூறப் பெற்றதாதல் வெண்டும். இவ்வேளிர் நாடே அதற்கு முன் கொங்கர் நாடு அல்லது மது மண்டிலம் என்ற பெயரில் வழங்கப் பெறுவதாயிற்று இருங்கோவேள் என்னும் இம்மன்னனைப் பாரிமகளிரை மணந்து கொள்ளும் பொருட்டுக் கபிலரும் வேண்டினார் என்ற வரலாறு புறநானூற்றால் அறிந்து கொள்ளத் தகுவதொன்றாகும். கபிலர் இம்மன்னனை நீயோ புலிகடிமால் இவரைக் கொண்மதி என வேண்டுகின்றார்.

இங்குக் குறிக்கப்பட்ட பாடலில் அவர் வெறுத்துக் கூறும் போது, இவருள் முன்னோருள் ஒருவன், கழத்தலையாரை இகழ்ந்தமையால், அவன் நகரமாகிய பேரரயம், சிற்றரயம், என்னும் பதிகள் அழிந்தன என்று கூறுகின்றார். ஆதல் கொண்டு இவனது அரய நாட்டில், பேரரயம், சிற்றரயம் என்ற பதிகள் இருந்து அழிந்தன வாதல் வேண்டும். இவனைப் புலிகடிமால் என்று அவரே அழைத்திருத்தலால், இவனது பரம்பரையார் புலிகடிமால் என்று தங்களை அழைத்துக் கொள்ளுதலில் வியப்பொன்றும் இல்லை. இவன் புலிகடிமாலாயிருந்தவரலாறு, முன்னரே காங்கேயச் செல்வி என்ற தலைப்பில் சாத்தந்தையர் என்ற பிரிவில் உரைக்கப்பட்டது. ஆதலால் ஆண்டு அதனைக் கண்டுணர்க. சங்க காலத்துக்கு முன்னும், அதற்குப் பின்னும் கொங்கு நாட்டில், இவனது பரம்பரையார் குறுநில மன்னராய்ப் பல காலம் இருந்து வந்தனர். இவனும் இவனது பரம்பரையாரும், சாத்தனாரை வணங்கும் நிலையினர். அவன் குடும்பத்தில் வந்த தலைவர்கள் தங்கள் இயற் பெயரைச் சாத்தன் என்றே அழைத்து வந்தனர். ஆதலால், இவரது பரம்பரையார், சாத்தனைத் தந்தையாக உடையவர் என்ற நிலையில் சாத்தந்தையராக ஆனார்கள்.

இப்புலிகடிமால் பரம்பரையார், வேங்கடம் முதல் பல இடங்களில் குறு நில மன்னராயிருந்த செய்திகள் இவர்களது பரம்பரைச் சரிதத்தால் போதருகின்றது. இவர்கள் எங்கு வாழ்ந்தாலும், தங்களது அடையாளமாகிய, புலிகடிமால் அடையாளத்தை அமைத்து வாழ்தலை இயல்பாகக் கொண்டிருந்தார்கள். குடவாயிலுக்கு அருகாமையில் உள்ள ஒல்லையூர் நாட்டிலும் பெருஞ் சாத்தன் என்ற மன்னன் வாழ்ந்த செய்தியும் பிறவும் புறநானூற்றால் அறிவதொன்றாம். அவ்வொல்லையூர் சிவாலயத்து புலிகடிமால் சிலையை இன்னுங்காணலாம்.

புலிகடிமால் பரம்பரையினர், கலிங்கத்தை வென்ற குலோத்துங்கச் சோழ மன்னன் காலத்தில், வெள்ளை அரயம் (வென்னோடை) என்றபதியில் குறு நில மன்னராக இருந்தார்கள். இவர்களது மற்றைய பதிகளாகக் கூறப்படும். பேரரயம், சிற்றரயம் என்னும் இரண்டு பதிகளும், வெள்ளை அரயத்துக்கு அருகிலேயே பேரோடு, சித்தோடு என்ற பெயரில் பழைய இடத்தில் அமைத்த புதுப்பதிகளாகக் காட்சி தருகின்றன. இவர்கள் வெள்ளரையம், அல்லது வெண் கோழிப் பதியில் அரசுபுரிந்த காலத்தில், கலிங்கத்துப் போரில், வெற்றி கொண்ட, அநபாய சோழமன்னன் அரசு புரிந்துவந்தான். அநபாய சோழமன்னன், இச்சரத்தந்தையர் குலத்தலைவனான, கருணாகரன் என்ற வீரப் பெருமகனை நட்பரசனாக ஆக்கி, தொண்டைமான் என்ற பட்டமும் அளித்தான். கலிங்கப் போரும் நிகழ்ந்தது. அப்போரில் படை கொண்டு சென்ற பெருமையும், வெற்றி கொண்ட பெருமிதமும், புலிகடிமால் பரம்பரையில் வந்தவனான, கருணாகரனையே சார்வதாயிற்று. கலிங்கப் போரில் வெற்றி கொண்ட நாள் முதல், கலிங்கராயன் என்ற பட்டமும், இவனுக்கு எய்துவதாயிற்று.

கலிங்கராயர் என்ற பட்டம் எய்திய வெண் கோழிப்பதி இறைவராய இச்சாத்தந்தையர், இன்னும் வெண் கோழிப்பதியில் காணியாளராய் இருந்து வருகிறார்கள். இவர்களுடன் கலிங்கப் போரில் துணையாகச் சென்றவன், வண்டையர்க்கரசன் எனக் கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. இவ்வண்டையர்க்கரசனாகக் கருதப்படுபவன் "பூந்துறை" நந்நாட்டுத் தலைவனான நன்னன் உடையான் என்ற காடவர்குல வேந்தனேயாவன். பூந்துறை, வளமை நிறைந்த வண்டல் நிலத்தை யுடைய தாகலின் இது அக்காலத்தில் வண்டை யென்ற பெயருடன் விளங்கு வதாயிற்று. இன்றும் அப்பதியில் நன்னன் உடையான் என்ற பெயருடன் அந்த நகரத்தில் காணியாளர்கள் பலர் இருந்து வருவதைக் காணலாம்.

வெள்ளுறந்தை என்னும் வெண் கோழிப்பதியும், வண்டை என்னும், பூந்துறைப்பகுதியும், ஈரோடுதாலூகாவில் கிராமத் தலை நகரங்களாக உள்ளதை யாரும் அறிவர்.

வெள்ளுறந்தைப் பதிக் காணியாளர்களில், தலைவராக விளங்கிய காலிங்கராயன் ஒருவன், தற்பொழுதைய கரூரின் பக்கலில் உள்ள, வெண்ணையூர், என்னும் பதியில் உள்ள பண்ணன் கூட்டத்தலைவனாகிய காணியாளன் ஒருவனிடம், தனது குமாரனுக்குப் பெண் வேண்டித் தனது சுற்றம் சூழச் சென்றான். பண்ணன் என்பவன், பசிப்பிணி மருத்தவனாக இருந்த நிலைமை, சங்க இலக்கியத்தில் கண்ட தொன்று அவனது பரம்பரையில் வந்தவன் ஆதலால், வெண்ணையூரில் வாழ்ந்தவனாகிய பண்ணர் கூட்டத்தான், தனது நிலைமைக் கேற்பச் சிறிது பெருமித நிலையில் காட்சி யளித்தான். கம்பன் கவியால் புகழ் பெற்ற வெண்ணையூர், பண்ணன் பரம்பரையில் வந்த சடையப்ப வள்ளலைப் பெற்றெடுத்த வெண்ணையூர் பண்ணைகள் நிறைந்த வெண்ணையூர்த் தலைவன் சிறிது மிடுக்காக இருந்ததில் வியப்பொன்றும் இல்லை. அப்படிச் சுற்றம் சூழச் சென்ற காலிங்கராயனது வருகைக்கு மகிழ்ச்சியடைந்து நல்ல வரவேற்பளித்து வெண்ணையூரன் எதிர் கொண்டான். சுற்றத்தார் பலரும் அம்ர்ந்திருக்கும் அவ்வமயம், பண்ணன் கூட்டத்தைச் சார்ந்த காணியாளனது, சமையல் காரன் வந்து, சமைத்தல் பற்றி, தனது தலைவனிடம் உசாவினான். அவன் பண்ணை வளம் மிகுந்த தனது பெருமிதம் தோன்ற தனது சம்பந்தியாராக வரவிருக்கும் கலிங்கராயன் பரம்பரையாரது மிடுக்கை ஆராயாமல், வயல்வளம் நன்கு அமையப் பெறாத ஊரில் வாழும் இவர்கள், சன்னச் சம்பாவின் சுவை தெரிந்தவர்களா? பெரு நெல்லின் நிலையை அறிந்தவர்களா? ஏதோ பெயரளவில் சமைப்பாயாக என்று கட்டளையிட்டான். இச்சொல், செவியிற் புகக்கேட்ட காளிங்கராயன், வெகுண்டு எழுந்து, எங்கள் நாட்டை நன் செய் நாடாக ஆக்காமல் இனி

உங்கள் வீட்டில் பெண்ணுக்கு வருவதில்லை என்று பேசிவிட்டு, தனது சுற்றத்தாருடன், அப்பொழுதே தனது நகரை நாடி வந்தான்.

வந்தவன் நஞ்செய் நாடாக்கத்தான் செய்யும் செயல் முறைகளை நன்கு எண்ணித் தான் செய்ய விருக்கும் செயலைச் செய்யத் தொடங்கினான். தனது நாட்டில், காவிரியொடு பவானி (வானி) கலக்கும் கூடுதுறைச் சங்கம இடத்தில், ஒரு பெரு அணையை நல்லமுறையில் கட்டினான். கட்டித் தேக்கிய தண்ணீரைச் சுமார் நூறு கல்லளவிற்குக் கால்வாய வழியாகக் கொண்டு சென்று அப்பகுதியை எல்லாம் நன் செய் நிலமாக ஆக்கினான். அக்கால்வாய் இன்றுங்காலிங்கராயன் கால்வாய் என்று வழங்கப் பெறுகின்றது. பவானி, காவிரி நதிச் சங்கமுகத்துறையில் கட்டப் பெற்ற அணைக்கட்டை இன்றும் கலிங்கராயன் அணைக்கட்டு என்று கூறுகின்றார்கள். இவ்வணைக் கட்டின் மத்தியில் இக்கலிங்கராயனது, பரம்பரை அடையாளமாகிய புலிகடிமால் அடையாளம் இன்றும் காணப்படுகின்றது.

இக்கலிங்கராயனது முன்னோருள் முதல்வனாகிய கருணாகரன், விஜயதரனின், ஞாபகார்த்தமாக விஜயமங்கலம் என்ற நகரம் ஒன்றை அமைத்தான். அந்நகரை, அகநகர், புறநகர் என இருகூறாக அந்நாளில் செய்தமைத்தான். அகநகரில், அக்கால வழக்கப்படி அமைத்த செல்வியை யாவரும் அகத்தூர்ச் செல்வி என்று அழைத்தார்கள். விஜயமங்கலத்திற்கு அகத்தூர் என்ற பெயர் உண்டு என்பதை, அந்த நகரப்பகுதியில் உள்ள சிவாலயக் கல்வெட்டொன்றில் அறியலாம். அக்கல் வெட்டையும், கலிங்கராயன் அணைகட்டிய நிலையையும் அறிய விரும்புவோர், கொங்குமண்டில சதகத்தைக் கொண்டு தெரிந்து கொள்க.

விஜயமங்கலம் என்ற பதியை அமைத்த கருணாகரன் அபபதியைத், தன்னுடன் கலிங்கத்திற்கு வந்து தனக்கு வெற்றிதந்த படைத்தலைவர் சிலர்க்குப் பகிர்ந்தளித்து விட்டு, தனது தலைநகராக உள்ள வெண் கோழிப்பதிக்கே சென்று அரசுபுரிந்தான். அதன் பின்னர்த்தான் அணைகட்டும் செயல் நிகழ்ந்த தென்க. அணைகள் யாவும் நல்ல முறையில் அமைந்த பின்னர், கால்வாய் வழியாகச் சென்ற நீரால், நாடு நன் செய் நாடாகக்கண்ட, கலிங்கராயன் தான் புரிந்த அறத்தின் பயனைத் தானே பகிர்ந்து உண்ணுதல் தக்கதன்றென்று எண்ணி, காலிங்கராயன் நகர் என்றதோர் நகரைத் தான் கட்டிய அணைக்கட்டின் கக்கலில் நிறுவி, தான் தனது பரிவாரங்களுடன், பலகாவதங்களுக்கு அப்பாலுள்ள, பொள்ளாச்சி நகருக் கருகில் உள்ள இடத்தில் ஊற்றுக்குளி என்ற தோர் நகரை அமைத்து ஆங்குவாழத் தொடங்கினான். ஆங்கு, கவனிப்பாரற்றுக் கிடந்த காட்டு நிலங்களைத் திருத்தி நல்ல நாட்டு நில மாக்கி, கஷ்டப்படு வோருக் குதவியாக இருந்து அந்தப் பகுதியில் குறும்பு செலுத்தி வாழ்ந்தான், அந்தப் பகுதியில் அகத்தூர்ச் செல்வி என்ற தனது குல தெய்வத்திற்கு ஒரு கோவிலும், தங்கள் வழிபடு தெய்வமாக உள்ள சிவாலய மொன்றும், நிருமித்தான். இவ்விரு ஆலயத்தும், தனது புலிகடிமால் அடையாளத்தை அமைத்துள்ளான். அதனை யின்றும் ஊற்றுக் குளிச் சிவாலயத்துக்குச் செல்லுவோர் கண் கூடாகக் காணலாம்.

ஊற்றுக்குளி என்பது, தற்போது பொள்ளாச்சிக்கு மேற்கே மூன்றுகல் தொலைவில் இருக்கின்றது. இங்கு குறு நிலமன்னராக (ஜமீன்தாராக) இருந்துவரும்புரவலர், முத்து ராமசாமிக் கலிங்கராயர் அவர்கள் ஆவார்கள். இவர்கள் தங்களை இன்றும், அகத்தூர், முத்து ராமசாமிக் காளிங்கராயர் என்ற பட்டப் பெயரால் அழைத்துக் கொள்ளுகின்றனர். இவர்கள் தங்கள் கூட்டத்தை, வெண்ணோடைச் சாத்தந்தையா என்று கூறுகின்றார்கள்.

இவர்கள் குலதெய்வமாக இருப்பதும், இவர்களால், நன்கு போற்றப்படுவதும் ஆக உள்ள செல்விதான், அகத்தூர் செல்வி. அகத்தூர்ச் செல்வி யிந்த நாட்டாருக்குப் பல வழியிலும் நலம் பகிரும் தேவியாக இருந்து வரும் நலம் போற்றதற்குரியது.

- நன்றி -

கொங்குச் செல்வி

வித்வான். கே. பழனிச்சாமிப் புலவர்

5—1—1949

இன்று 11.08.2006

சஷ்டியப்த பூர்தி மணவிழா

60 ஆம் ஆண்டு நிறைவு விழா

கொண்டாடும்

திரு. அகத்தூர் அருண்குமார் காளிங்கராயர்

திருமதி. சீதா காளிங்கராயர்

அவர்களுக்கு

அகத்தூர் அம்மன்

திருவருள் கிடைக்க

நாங்கள் மனம் குளிர பல்லாண்டு வாழ்க

என வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு

அகத்தூர் அம்பாள் கல்வி அறக்கட்டளை

A. செந்தில் குமார் காளிங்கராயர்

S. சாந்தா காளிங்கராயர்

Dr. S. ஸ்ரீராம் காளிங்கராயர்

Dr. S. லயா காளிங்கராயர்

"அகத்தூர்"

A/30, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.

அகத்தூர் அம்மன் துணை
வாழ்த்து

உலகு புரந்தளிக்கும் ஒரு உத்தமி நீ
உன் மகவாம் காளிங்கராயருடன்
நிலவுலகில் நடைதொடர்ந்து நீள்வதனை
நினையாதே இளைத்து நின்று
கலங்குமொரு புலர்பொழுதில்
கனிந்த மனத்தினையாகி
அவர் காண இனிமை
இலகுமொரு நீரூற்றுக்காட்டி
(இனி தருந்தச்
செய் இன்னருளை மறவேம் அம்மா.

சுபஸ்ரீ பிரிண்டர்ஸ், பொள்ளாச்சி. போன் : 224267, 98432 22995